பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 140

செவ்வாய்க்கிழமை
15 ஏப்ரல் 2025

சித்திரை 02 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## ஐ.எம்.எப். இலக்குகளை அடைவதில் சிக்கல்கள்

» 02

# இலங்கையில் மீண்டும் மருத்துவ நெருக்கடி!

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் எச்சரிக்கை



**கொழும்பு, ஏப்ரல். 15**
**இலங்கையில் மீண்டும் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. சுகாதார நெருக்கடியை எதிர்கொள்ளக்கூடிய நிலைக்கு நாடு தள்ளப்பட்டுள்ளது. இந்த நெருக்கடிகளைச் சீர்செய்வதற்கு அரசாங்கத்திடம் எந்தத் திட்டங்களும் இல்லை இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவித்துள்ளார்.**

☞ 11

## ஏப்ரல் இறுதிவாரத்தில் பரப்புரை உச்சமாகும்!

### மே தினத்தில் பலப்பரீட்சை

கொழும்பு, ஏப்ரல் 15
ஏப்ரல் மாதத்தின் இறுதிவாரத்தில், பிரதான கட்சிகளின் தேர்தல் பரப்புரைகள் உச்சம்பெறும் என்றும், பேரணிகளையும் பரப்புரைக் கூட்டங்களையும் தொடர்ச்சியாக நடத்த ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன என்றும் தெரியவருகின்றது.

☞ 11

## வடக்கில் இன்று அனல் அடிக்கும்

கொழும்பு, ஏப்.15
வடக்கு உட்பட, நாட்டின் பல பகுதிகளில் இன்று மனித உடலால் உணரப்படும் வெப்பம் எச்சரிக்கை மட்டத்தில் இருக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.
இது தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

☞ 11

## நீச்சல் குளத்தில் மூழ்கி இளைஞர் உயிரிழப்பு!

### புத்தாண்டு தினத்தில் சோகம்

வவுனியா, ஏப். 15
வவுனியா தவசிகுளம் பகுதியில் உள்ள நீச்சல் குளமொன்றில் குளித்துக்கொண்டிருந்த இளைஞர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். நேற்று மாலை இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த 18 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார்.

☞ 11

## இந்த வருடம் 778,843 சுற்றுலாவிகள்

கொழும்பு, ஏப். 15
ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து ஏப்ரல் மாதம் 9ஆம் திகதிவரையான காலப்பகுதிக்குள் 7 இலட்சத்து 78 ஆயிரத்து 843 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்

☞ 11

## தென்னையால் வீழ்ந்து ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஏப். 15
கள் இறக்குவதற்காக தென்னை மீது ஏறியவர், தவறி வீழ்ந்து பரிதாபகரமாக உயிரிழந்தார். நேற்றுக் காலை இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
கல்வியங்காட்டைச் சேர்ந்த சின்னத்துரை ரவி (வயது- 44) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
தென்னையில் ஏறியபோது, தென்னையில் கட்டப்பட்டி

☞ 11

## ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரி சஹ்ரான்

### எப்.பி.ஐ. அறிக்கை

விரிவு பக்கம் » 3

## போதைப்பொருள் கடத்தலை முறியடிப்பதற்கு நடவடிக்கை

கொழும்பு, ஏப்.15
போதைப்பொருள் கடத்தல்காரர்களைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகள் பொலிஸாரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
நேற்றுமுன்தினம் முதல் அனைத்துப் பிராந்தியப் பொலிஸ் பிரிவுகளையும் உள்ளடக்கி போதைப்பொருள் வலையமைப்புகளை

☞ 11



'மண்ணாசை கடைசியில கம்பியெண்ண வைச்சிடும் எண்டது அந்த முன்னாள் எம்.பி.க்கு விளங்காமல் போட்டுதே'

## வீதியோரமாக நின்றவரை பலியெடுத்த மோ.சைக்கிள்

யாழ்ப்பாணம், ஏப். 15
வீதியோரமாக நின்று கதைத்துக்கொண்டிருந்தவர் மீது, அதிவேகமாக வந்த மோட்டார்சைக்கிள் மோதியதில், அவர் பரிதாபமாக உயிரிழந்தார்.
வல்வெட்டித்துறை - ஆதிகோவிலடிப் பகுதியைச் சேர்ந்த இரட்ணவடிவேல் இரவீந்திரன் (வயது 65) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
கடந்த 11ஆம் திகதி, வீதியோரமாக சைக்கிளை நிறுத்திவிட்டு இன்னொரு

☞ 11

## விபத்துகளால் 3 மாதங்களில் 562 பேர் பலி!

விரிவு பக்கம் » 5

### மண் கடத்தலில் ஈடுபட்ட


## முன்னாள் எம்.பி. ஒருவர் விரைவில் கைதாகலாம்!

### சுமந்திரன் தெரிவிப்பு

விரிவு பக்கம் » 6

## தற்போதைய அரசிலும் நம்பிக்கை இழந்தோம்!

### காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் நேற்றுப் போர்



யாழ்ப்பாணம், ஏப். 15
ஜனாதிபதி அநுர மீதும், தற்போதைய அரசாங்கத்தின் மீதும் நம்பிக்கை இழந்துள்ளோம் என்று காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவித்துள்ளனர்.
காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்துமாறும், தமக்கு நீதி வேண்டும் என்றும் வலியுறுத்தி.

☞ 11

மக்கள் ம[illegible] தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எம்.எப். இலக்குகளை அடைவதில் நெருக்கடி!

## சலுகைகள் கோரவுள்ள இலங்கை

கொழும்பு, ஏப்.15

அமெரிக்காவின் புதிய வரிகளால் பொருளாதாரத்தில் ஏற்படும் தாக்கங்களை ஈடுசெய்ய, சர்வதேச நாணயநிதியத்திடம் அரசாங்கம் சலுகைகளைக்கோரும் என்று திறைசேரியின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.


சர்வதேச நாணயநிதியத்தின் நான்காவது தவணை நிதி அடுத்த மாதம் அல்லது ஜூன் மாதத்திலும், ஐந்தாவது தவணை நிதி நவம்பர் மாதத்திலும் வழங்கப்படவுள்ளது.

2023ஆம் ஆண்டு ஆரம்பத்தில் இருந்து அனைத்து வருமான இலக்குகளையும் இலங்கை உரியமுறையில் கடைப்பிடித்துவருகின்றது.

ஆனால் அமெரிக்க வரி விதிப்பால் தற்போது சிக்கல் ஏற்பட்டுள்ளது.

சர்வதேச நாணயநிதியம் 2025ஆம் ஆண்டுக்கான ஏற்றுமதி வருமானத்தில் கூடுதலாக 3 பில்லியன் டொலர் இலக்கை நிர்ணயித்துள்ளது.

அமெரிக்காவின் வரிகளால் இந்த இலக்கை அடைவது கடினம். வருமான இலக்குகள் தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை அரசாங்கம் சலுகைகளைக் கோரும் என்று திறைசேரியின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (எ-இ)



# பஸ்சாரதி விபத்தில் சாவு

கொழும்பு, ஏப்.15

மாவனெல்லை, அக்பர்புரப் பிரதேசத்தில் நேற்று நடந்த விபத்தில் பஸ் சாரதி ஒருவர் உயிரிழந்துள்ளார். மாவனெல்லையில் இருந்துவந்த பஸ் மற்றொரு வாகனத்தை முந்திச் செல்லமுயன்றபோது எதிரே வந்த இராணுவ லொறியொன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. பஸ் சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை அக்பர்புரப் பொலிஸாரால் முன்னெடுக்கப்படுகின்றன. (எ-இ)



சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச்சங்கத்தின் ஏற்பாட்டில் உத்தியோகத்தர்களுக்கிடையிலான சைக்கிளோட்டப் போட்டி கடந்த செவ்வாய்க்கிழமை காலை நடைபெற்றது. (ச- 9)

# நெடுஞ்சாலைகள் வருமானம் 134 மில்.

கொழும்பு, ஏப்.15

அதிவேக நெடுஞ்சாலைகளில் 3 நாள்களில் மட்டும் கிடைத்த வருமானம் 134 மில்லியன் ரூபாவைத் தாண்டியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 11, 12 மற்றும் 13ம் திகதி ஆகிய 3 நாள்களின் இந்த வருமானம் கிடைத்துள்ளது என்று போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# விபத்தில் நால்வர் காயம்




அனுராதபுரம், ஏப்.15

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் இரு வாகனங்கள் விபத்துக்குள்ளானதால் இரு சிறுமிகள் உட்பட நான்கு பெண்கள் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து கடந்த சனிக்கிழமை நடந்துள்ளது. அநுராதபுரத்துக்கு வழிபாட்டுக்காகச் சிறுவர்களை ஏற்றிச் சென்ற வாகனத்தின் பின்புறமாக சுற்றுலாப்பயணிகளின் வாகனமொன்று மோதியதால் இந்த விபத்து நடந்துள்ளது.

விபத்தில் காயமடைந்த நால்வரும் உடனடியாக களுத்துறை மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் ஒருவரின் உடல் நிலை ஆபத்தான நிலையில் உள்ளது என்று மருத்துவமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-சி)

# கலை, கலாசார பண்பாட்டு விழா

கொடிகாமம், ஏப்.15

மீசாலை வடக்கு நகுலன் சனசமூக நிலையத்தின் கலை கலாசாரப் பண்பாட்டு விழா தட்டாங்குள பிள்ளையார் கோவில் வீதியில் அமைந்துள்ள நகுலன் சனசமூக நிலையத்தில் நேற்றுத்திங்கட்கிழமை இடம்பெற்றது.

தலைவர் ம.மதுஷன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன், யாழ். போதனா மருத்துவமனை மருத்துவர் திருமதி சிவசாதனா தினேஸ் மற்றும் கொழும்பு றாகம பொதுமருத்துவமனை மருத்துவர் வி.கஜீபன் ஆகியோர் கலந்துகொண்டனர். (எ-41-159)



# கண்டிப் பெரஹராவில் இராணுவப் பாதுகாப்பு!

கொழும்பு, ஏப்.15

கண்டிப் பெரஹராவுக்காக வரும் பக்தர்களின் பாதுகாப்புக்காக, பொலிஸாருடன் இணைந்து இராணுவத்தினரையும் ஈடுபடுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கண்டிப்பெரஹரா நிகழ்வுகள் ஜூலை 18 ஆம் திகதி ஆரம்பமாகி ஜூலை 27 ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளன. கண்டி தலதாமாளிகையிலும், அதைச்சூழவுள்ள பகுதிகளிலும் இலட்சக்கணக்கான பக்தர்கள் திரள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. பக்தர்களின் பாதுகாப்பை உறுதிசெய்யவும், சனநெரிசலைக் கட்டுப்படுத்தவும் கடந்தகாலங்களில் பொலிஸார் திணறியிருந்தனர். இந்தநிலையிலேயே இந்தமுறை கண்டிப் பெரஹராவுக்கான பாதுகாப்புப் பணிகளில் இராணுவத்தினரையும் ஈடுபடுத்த அரசாங்கம் முடிவெடுத்துள்ளது. (எ-33-சி)



# மூன்று மாதத்துக்குள் 30 துப்பாக்கிச்சூடுகள்

கொழும்பு, ஏப்.15

கடந்த மூன்று மாதகாலப்பகுதியில் மாத்திரம் நாடெங்கும் 30 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் தகவல் வெளியிட்டுள்ளது. இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களில் சிக்கி 30 பேர் உயிரிழந்துள்ளனர். இவர்களில் 19 பேர் பாதாள உலகக்குழுக்களால் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் இறந்துள்ளனர். அண்மைக்காலமாக பாதாள உலகக் குழுக்களால் மேற்கொள்ளப்படும் துப்பாக்கிச்சூடுகள் அதிகரித்துள்ளமை நாட்டில் பெரும் அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளது எனவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (எ-33-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்கொலைத் தாக்குதல் சூத்திரதாரி சஹ்ரான்!

## எப்.பி.ஐ. அறிக்கையில் உறுதி

**கொழும்பு, ஏப்.15**

**உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத்தாக்குதலின் பிரதான சூத்திரதாரியாக சஹ்ரான் ஹாசிம் செயற்பட்டுள்ளார் என்று எப்.பி.ஐ. அறிக்கை உறுதிப்படுத்தியுள்ளது.**

அமெரிக்காவின் எப்.பி.ஐ. கலிபோர்னியாவின் அமெரிக்க நீதிமன்றத்தில் சமர்ப்பித்த ஒரு முக்கியமான ஆணையிலேயே 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரி சஹ்ரான் ஹாஷிம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நுட்பமான நீதிமன்றச் சாட்சியங்கள், சமூக ஊடகப் பதிவுகள் மற்றும் சாட்சிகளின் வாக்கு மூலங்களை அடிப்படையாகக்கொண்டு தயாரிக்கப்பட்ட எப். பி. ஐ. அறிக்கையில், இலங்கையில் இயங்கிய உள்ளூர் ஐ.எஸ். அமைப்பை சஹ்ரான் ஹாசிம் வழிநடத்திய விதமும், அந்த தற்கொலை வெடிகுண்டுத் தாக்குதல் திட்டத்தை எப்படித் திட்டமிட்டார் என்பதும் விளக்கப்பட்டுள்ளது. அதேவேளை, இந்த அறிக்கை மிக முக்கியமான ஆதாரங்களைக் கொண்டிருந்த போதிலும், இலங்கையால் புறக்கணிக்கப்பட்டுள்ளது. (எ-இ)




**பதறின காரியம் சிதறித்தான் போகும். அவசரக் குடுக்கைத்தனமா, எல்லாந் தெரிஞ்ச ஏகாம்பரம் மாதிரி நடக்கிறவை, ஒண்டையும் ஒழுங்காச் செய்யாயினம். மற்றவைக்கு வழிகாட்டவேண்டியவையே இப்பிடி நந்தவனத்து ஆண்டி தோண்டியைப் போட்டுடைச்சமாதிரியான வேலையளைச் செய்யினம் எண்டதுதான் இப்ப உள்ள பிரச்சினையே. கிளிநொச்சியில கிரிக்கெட் கோச்சர் ஒருத்தர் பள்ளிக்கூடப் பிள்ளையளைக் கட்டாயப்படுத்தி ஓரினச்சேர்க்கையில ஈடுபடுத்தி மாட்டுப்பட்ட செய்தியை வாசிச்சிருப்பியள். முதலில பாதிக்கப்பட்ட பிள்ளையளின்ர பெற்றோர்தான் இப்பிடி ஒரு பிரச்சினை இருக்கெண்டு கண்டுபிடிச்சவை. தங்கட பிள்ளையள் வழக்கத்துக்கு மாறா சாப்பிடாமல், படிக்காமல், நெடுகலும் வருத்தம் எண்டு சோர்ந்து சோர்ந்து படுக்கிறதைப் பார்த்திட்டுதான் அவையள் மெல்லமெல்ல பிள்ளையளிட்ட கதைகேட்டு, கடைசியில இப்பிடி ஒரு அக்கிரமம் தங்கட பிள்ளையளுக்கு நடக்குதெண்டு அறிஞ்சவை. பிறகு பொலிஸில முறைப்பாடு செய்தும் பொலிஸ்காரரும் இதைப் பெரிசா எடுக்கேலையாம். பிறகு எல்லாப் பக்கத்தாலையும் கடும் அழுத்தங்கள் வரத்தான் பொலிஸ்காரர் விசாரணையில இறங்கினவை.**

**அப்பிடி பொலிஸ்காரர் விசாரிச்ச விதம்தான் இப்ப பெரிய சலசலப்பைக் கொண்டுவந்திருக்குது. இந்தப் பிரச்சினையில பாதிக்கப்பட்டது பள்ளிக்கூடப் பிள்ளையள். அதுகள் இந்தளவு தூரம் இந்தப் பிரச்சினையை வெளிப்படுத்தினதே பெரியவிசயம். அப்பிடிப் பாதிக்கப்பட்ட பிள்ளையளிட்ட இன்னும் வடிவா விசாரிக்கவேணும் எண்டா அதுக்கெண்டு பக்குவமான முறையள் இருக்கு. பிள்ளையளின்ர வீட்ட சாதாரண ஆள் மாதிரி போய், சுகநலம் விசாரிக்கிறமாதிரி அணுகி, அந்தப் பிள்ளையே அறியாதமாதிரித்தான் தகவல்களை எடுக்கோணும். அதைவிட்டிட்டு அந்தப் பிள்ளையள்தான் ஏதோ பிழை செய்தகணக்கில பொலிஸ்காரர் விசாரிச்சிருக்கினம். பிள்ளையளை ஒரு அறைக்குள்ள சாப்பாடு தண்ணிகூடக் குடுக்காமல் ஒருநாள் முழுக்க பூட்டி வைச்சிருந்திருக்கினம். அதைவிட பொலிஸ் ஜீப்பில கைதியளைக் கொண்டுபோறமாதிரி இந்தப் பிள்ளையளையும் எல்லாரும் பாக்கத்தக்கனையா ஏத்திக்கொண்டு போயிருக்கினம். இப்பிடி ஒரு கொலைகாரனை விசாரிக்கிறமாதிரி பிள்ளையளையும் விசாரிச்சால், ஏற்கனவே நொந்துகிடக்கிற அந்தப் பிள்ளையளின்ர மனம் எவ்வளவு பாதிக்கப்படும் எண்டு உந்தக் காக்கிச்சட்டை போட்டவைக்குத் தெரியாதோ?**

**அதைவிட இனிமேல் இப்பிடியான பிரச்சினையள் வேற பிள்ளையளுக்கு நடந்தாலும் அதுகள், 'நாங்கள் இதைச் சொன்னால் பொலிஸ் எங்களைத்தான் அவமானப்படுத்தும்' எண்ட பயத்தில வெளியில சொல்லாமல் ஒளிச்சுப்போடுங்கள். உதெல்லாம் உவைக்கு ஏன் உறைக்கேலை? உண்மையில அந்தப் பிள்ளையளின்ர பெற்றோர் இதைப்பற்றி உரிய இடங்களுக்கு அறிவிச்சால், பிள்ளையளை சாப்பாடு குடுக்காமல் அறைக்குள்ள அடைச்சு வைச்ச பொலிஸ்காரரின்ர வேலையையே பறிக்கலாம். குற்றவாளியளை சுதந்திரமா விட்டிட்டு, பாதிக்கப்பட்டவையில பாயிற வேலையளை எப்பதான் உந்தக் காக்கிச்சட்டைக்காரர் கைவிடப் போயினமோ?**

padsi@uthayan.com - படீசி



## வெளிநாட்டுப் பண அனுப்பல் அதிகரிப்பு

கொழும்பு, ஏப்.15

வெளிநாட்டுப் பணியாளர்களின் பணம் அனுப்பல் கடந்த மாதம் அதிகரித்துள்ளது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த மாதத்தில் வெளிநாட்டுப் பண அனுப்பல் 693.3 மில்லியன் அமெரிக்க டொலராகப் பதிவாகியுள்ளது என்று இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது. கடந்த ஆண்டு ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் இது 18 சதவீதம் அதிகரிப்பாகும்.

இதேவேளை, கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் வெளிநாட்டுப் பணவனுப்பல் 572.4 மில்லியன் அமெரிக்க டொலராக பதிவாகியிருந்தது. (எ-இ)

## தந்தை செலுத்திய லொறியில் சிக்கிக் குழந்தை உயிரிழப்பு!

கொழும்பு, ஏப்.15

தந்தை செலுத்திய லொறியின் சக்கரத்துக்குள் சிக்கி ஒரு வயதும் ஏழு மாதங்களுமான குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

வீட்டு முற்றத்தில் நிறுத்தப்பட்டிருந்த லொறியை தந்தை பின்னோக்கி இயக்கியபோது, குழந்தை சக்கரத்துக்குள் சிக்கியுள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த குழந்தை பலாங்கொடை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போதும், உயிரிழந்தது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். விபத்துடன் தொடர்புடைய 39 வயதான தந்தை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். (எஇ)



## போதைப் பொருளுடன் பெண் கைது

கொழும்பு, ஏப்.15

கொழும்பு மட்டக்குளிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கதிரானவத்தைப் பிரதேசத்தில் ஐஸ் மற்றும் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருள்களுடன் பெண் ஒருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் 44 வயதுடைய பெண் என்று தெரிவித்த பொலிஸார், சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப் படுகின்றன என்று தெரிவித்துள்ளனர். (எ-இ)

## மதுபானத்துடன் ஒருவர் கைது

கொழும்பு, ஏப்.15

கொழும்பு கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தொட்டலங்கப் பிரதேசத்தில் சட்டவிரோத மதுபானத்துடன் சந்தேகநபர் ஒருவர் கொழும்பு வடக்கு பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிராண்ட்பாஸ் பொ-லிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-இ)

# போதைப்பொருள் தடுப்பு 1,320 சுற்றிவளைப்புகள்!

கொழும்பு, ஏப்.15

தமிழ் மற்றும் சிங்களப் புத்தாண்டுப் பண்டிகைக் காலத்தில் நாடு முழுவதும் சட்டவிரோத மதுபானம் மற்றும் போதைப்பொருள் பரவுவதைத் தடுக்கும் நோக்கில் கடந்த 12ஆம் திகதி வரை ஆயிரத்து 320 சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தச் சோதனைகள் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்படும் என்று கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** சிலருக்கு எதிர்பார்த்த பணம் கிடைப் பதில் தாமதம் ஏற்படும். நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்க வாய்ப்பு உண்டு. முக்கிய முடிவுகள் எடுப்பதில் பொறுமை அவசியம். தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**இடபம்:** கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடுகள் நீங்கும். தாயின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அதிகப்படியான செலவும் அலைச்சலும் ஏற்படும். தந்தை வழி உறவினர்களால் குடும்பத்தில் வீண் பிரச்னைகள் ஏற்படக்கூடும் என்றாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**மிதுனம்:** தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். அரசாங்க வகையில் அனுகூலம் உண்டாகும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களு டன் அனுசரணையாக நடந்துகொள்வது நல்லது. பிற்பகலுக்கு மேல் புதிய முயற்சி களைத் தவிர்க்கவும்.

**கடகம்:** எதிர்பாராத செலவு களைச் சமாளிக்கக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தந்தையுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் அவருடன் பேசும் போது வார்த்தைக ளில் நிதானம் தேவை.

**சிம்மம்:** தாயாருடன் ஏற்பட்டிருந்த மனஸ்தாபம் நீங்கும். அவர் மூலம் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. முக்கிய முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். பிற்பகலுக்கு மேல் உறவினர்களால் சில பிரச்னைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது. வியாபாரம் வழக்கம்போல் நடைபெறும்.

**கன்னி:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். முக்கிய முடிவு களைத் துணிந்து எடுப்பீர்கள். குடும்பத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத்துணை ஆதரவாக இருப்பார்.

**துலாம்:** உணவு விஷயத்தில் கவனமாக இருக்கவும். பிள்ளைக ளுக்காக செலவு செய்ய வேண்டி வரும். உறவினர்களுடன் பேசும்போது பொறுமை அவசியம். குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டு நீங்கும்.

**விருச்சிகம் :** கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளை களின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். மூன்றாவது நபரின் தலையீடு காரணமாக குடும்பத்தில் ஏற்பட்டிருந்த குழப்பம் நீங்கும். வியாபாரம் சுமாராகத்தான் இருக்கும்.

**தனுசு:** வியாபாரத் தில் வாடிக்கையாளர்க ளுடன் வீண் பிரச்னைகள் ஏற்படக்கூடும் என்பதால் அவர்களுடன் கனிவாக நடந்து கொள்வது அவசியம். மூலம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு வாழ்க்கைத்துணை வழியில் வீண்பிரச்னைகள் உண்டாகும்.

**மகரம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கொடுத்த கடன் திரும்பக் கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை அடைவீர்கள். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு மாறும். உறவினர்கள் வகையில் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**மீனம்:** சகோதரர்களிடம் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகி முடியும். ஆனால், செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. தந்தையாரின் உடல் ஆரோக்கியம் மேம் படும். பிள்ளைகளால் சில பிரச்னைகள் ஏற்பட்டு நீங்கும்.



லக்னோவைத் தோற்கடித்து

# வெற்றிப் பாதைக்கு திரும்பிய சென்னை

**ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடை பெற்ற ஆட்டத்தில், லக்னோவை அதன் சொந்த மண்ணில் வைத்து வீழ்த்தி, தொடர் தோல்விகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தது சென்னை சுப்பர் கிங்ஸ்.**

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்னை அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. லக்னோ அணியின் ஆரம்ப வீரர் களாக மார்க்கம் மற்றும் மிச்செல் மார்ஷ் இருவரும் களமிறங்கினார் கள். 6 ஓட்டங்களுடன் வீழ்த்தப்பட் டார் மார்க்கம். இந்தத் தொடர் முழு வதும் பெரும் அச்சுறுத்தலாக உள்ள நிக்கொலஸ் பூரன் நேற்று 8 ஓட்டங்களுடன் கட்டுப்படுத்தப்பட் டார். மிச்செல் மார்ஷ் 30 ஓட்டங்க ளைப் பெற்றாலும் அதற்காக 25 பந்துகளை எதிர்கொண்டார். அணித்தலைவர் பன்ட் மிகவும் நிதானமான அரைச்சதம் ஒன்றை 42 பந்துகளில் பதிவுசெய்தார். அவர் 63 ஓட்டங்களுடன் ஆட்டமி ழக்க முடிவில் லக்னோ அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 166 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் ஜடேஜா இரண்டு விக் கெட்டுக்களைக் கைப்பற்றினார். பதிலுக்குக்களமிறங்கியசென்னை அணிக்கு நீண்ட நாள்களின் பின் னர் ஆரம்பம் சிறப்பாக அமைந் தது. ஷைக் ரஷீட், ரச்சின் ரவீந்திரா இருவரும் இணைந்து அதிரடி காட்ட 4.2 ஓவர்களில் 50 ஓட்டங்க ளைத் தொட்டது சென்னை. 27 ஓட்டங்களுடன் ஷைக் ரஷீட் ஆட்ட மிழந்தார். ராகுல் திரிபதி, ரவீந்திர ஜடேஜா இருவரும் மத்திய வரிசை யில் தடுமாற்றம் காட்டினார்கள். நல்லபடியாகச் சென்றுகொண்டி ருந்த சென்னையின் இன்னிங் ஸில் அவர்கள் இருவரும் அழுத் தத்தை ஏற்படுத்தினார்கள். துபே ஒருமுனையில் நிலைத்து நிற்க மறுமுனையில் வந்தவேகத்தில் அதிரடி காட்டினார் டோனி. முடிவில் 3 பந்துகள் மீதமிருக்க 5 விக்கெட் டுக்களால் வென்றது சென்னை. (ம)






சென்னை அணியில்

# ஹெய்க்வாட்டுக்குப் பதிலாக 17 வயதேயான இளம் வீரர்!

நடப்பு ஐ.பி.எல். தொடரில் முழங்கை பகு தியில் ஏற்பட்டுள்ள எலும்பு முறிவு காரண மாக சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் தலைவர் ஹெய்க்வாட் விலகிய நிலையில், அவரின் இடத்துக்கு 17 வயது இளம் வீர ரான ஆயுஷ் மாத்ரே இடம்பிடித்துள்ளார். ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி மும்பை இந்தி யன்ஸ் அணியுடனான ஆட்டத்துக்கு முன் பாக அவர் அணியில் இணைவார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆயுஷ் மாத்ரேவின் அதிரடி துடுப்பாட்டம் தேர்வாளர்களை ஈர்த்துள்ளது. இதோடு உள்ளூர் கிரிக்கெட்டில் சிறப்பான ஆட் டத்தை வெளிப்படுத்தியதும் அவரை தேர் வுசெய்ய காரணமாக அமைந்துள்ளது. 9 முதல் தர போட்டிகளில் 504 ரன்களை ஆயுஷ் மாத்ரே எடுத்துள்ளார். இதில் இரண்டு சதம் மற்றும் ஒரு அரை சதம் அடங்கும். (மஇ)

# திடீரென தீப்பிடித்த முச்சக்கர வண்டி

இரத்தினபுரி, அயகம, கங்கொடகந்த பிரதேசத்தில் பயணித்து கொண்டிருந்த முச்சக்கரவண்டி ஒன்று திடீரென தீப்பற்றி எரிந்துள்ளதுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு நடந்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. முச் சக்கர வண்டியில் ஏற்பட்ட எரிபொருள் கசிவு காரணமாக தீ பரவியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (எஇ)

# வெடித்துச்சிதறிய காரால் பரபரப்பு!

லண்டன் கெட்விக் விமான நிலையத்தில் திடீரெனக் கார் ஒன்று வெடித்துச் சிதறியதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. விமான நிலையத்தில் உள்ள வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்தப்பட்டிருந்த கார் ஒன்றே திடீரென தீப்பிடித்து எரிந்துள்ளது.

காரின் டயர்கள் வெடித்ததால் ஏற்பட்ட பெரும் சத்தம், பயணிக ளிடையே பெரும் பீதியை ஏற்படுத்தியது என்று சர்வதேச ஊட கங்கள் குறிப்பிட்டுள்ளன.

அதேவேளை, இந்த தீ விபத்துக்கான காரணம் தொடர்பாக விசா ரணை நடைபெற்று வருகின்றது என்றும், இந்தச் செயற்பாடுக ளால் விமான நிலையத்தின் செயல்பாடுகளில் பாதிப்பு ஏற்பட வில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




நாளொரு நல்வார்த்தை

இதயத்திலிருந்து பிறக்கும் அன்பே பண்பு.
மூளையிலிருந்து தோன்றும் கூற்றே அறிவு.
அறிவைவிட பண்பே உலகுக்குத் தேவை.

—வாரியார்—

# காலத்தின் கோரிக்கைக்கு காதுகொடுப்பார்களா?

இலங்கையிலேயே அதிக வளங்களைக்கொண்ட தமிழர் தாயகத்தில், வேலைவாய்ப்புகளை வழங்கக் கூடிய உற்பத்தித்துறைகளோ, தொழிற்சாலைகளோ மிகமிகக்குறைவு. இதற்கு முக்கியமான காரணம், வடக்கில் 40 வருடங்களுக்கும் மேலாக நிலவிய போர்க்காலச்சூழல். எப்போதும், எதுவும் நடக்கலாம் என்ற பதற்றமான சூழலைக் காரணம் காட்டி, இலங்கையில் முதலீடுசெய்ய விரும்புவோரை எல்லாம் தென்னிலங்கையில் மாத்திரம் குவியச்செய்து, அந்தப் பிரதேசங்களை பெறுமதிமிக்கவையாகவும், தேசிய உற்பத்தியில் காத்திரமான பங்களிப்பை வழங்கக் கூடியவையாகவும் ஆட்சியாளர்கள் மாற்றினார்கள். இதனால் அதிகளவான வேலைவாய்ப்புக்களையும் அவர்களால் வழங்கமுடிந்தது. ஆனால் போர் முடிந்து 15 வருடங்களைக் கடந்தும்கூட, குறிப்பிட்டுச் சொல்லக்கூடியளவான முதலீடுகளோ, தொழிற்சாலைகளோ வடக்கு, கிழக்கில் இல்லை. இந்தநிலையில்தான், மிகக்குறுகிய காலத்தில் வடமாகாணத்தில் உருவாக்கப்படவுள்ள மூன்று முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களில் முதலிடுவதற்கு முன்வருமாறு, வடமாகாண முதலீட்டாளர்களுக்கும், வடமாகாணத்தைச் சேர்ந்த புலம்பெயர் முதலீட்டாளர்களுக்கும் யாழ்ப்பாண வணிகர் கழகம் அழைப்பு விடுத்துள்ளது. இந்த அழைப்பு மிக முக்கியமான தருணத்தில், காலப்பொருத்தமானதாக அமைந்துள்ளது.

இலங்கைக்கு அமெரிக்கா 44 சதவீத இறக்குமதி வரியை விதித்துள்ள இந்தச் சமயத்தில், புதிய சந்தைகளையும், புதிய உற்பத்திகளையும் தேட வேண்டிய சூழல் எழுந்துள்ளது. ஓர் உற்பத்திப் பொருளின் தரம் அதிகமாகவும், விலை குறைவாகவும் இருந்தால் அதற்கான கேள்வி எல்லாச் சந்தைகளிலும் இயல்பாகவே அதிகரிக்கும். இதன்மூலம் புதிய சந்தைகளின் வாசல்களை இலங்கை அடைவதும், வருமானத்தை அதிகரிப்பதும் சாத்தியமாகும். இதற்குப் புதிய முதலீடுகளும், உற்பத்திகளும் அவசியம். இந்தச் சமயத்தில் தென்னிலங்கையை விடவும் தமிழர் தரப்பில் இப்போதுள்ள பெரும்பலம் புலம்பெயரிகள்தான். எப்படி யூதர்கள் தாங்கள் செல்லும் தேசங்களில் எல்லாம் ஒரு தவிர்க்கமுடியாத சக்தியாக மாறினார்களோ, அதேபோன்று இப்போது புலம்பெயர் ஈழத்தமிழர்களும் மாறியுள்ளனர். கல்வி, பொருளாதாரம், அரசியல், விளையாட்டு எனப் பலதுறைகளிலும் புலம்பெயர் தமிழர்கள் தாம் வசிக்கும் நாடுகளில் கோலோச்சத் தொடங்கியுள்ளனர். அவர்கள் பலம் பொருந்திய முதலீட்டாளர்களாகவும் உருப்பெற்றுள்ளனர்.

பல்தேசிய நிறுவனங்களை விடவும் அதிக முதலீடுகளைச் செய்யும் ஆற்றல் புலம்பெயர்தமிழர்க ளிடம் உண்டு. இருப்பினும் இங்கு முதலீடுசெய்வதற்கு ஒரு சிலர்தான் முன்வருகின்றனர். ஏனையோர் புரவலர்களாக, பாதிக்கப்பட்டோருக்கு உதவிகள் செய்வோராக இருக்கின்றனரேதவிர, முதலீட்டாளர்களாக மாறுவதற்கு ஏனோ தயங்குகின்றனர். மீனைக் கொடுப்பதைக் காட்டிலும் மீன்பிடிக்கக் கற்றுகொடுப்பதே நிரந்தரத் தீர்வாக அமையும். எனவே பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவ்வப்போது செய்யும் உதவிகளை விடவும், இங்கு முதலீடுகளைச் செய்து, தமிழர் தாயகத்தை பொருளாதார ரீதியாக பலமானதாக மாற்றுவதே, நம்மைப் பிறரிடம் கையேந்தாதவர்களாக மாற்றும். இயற்கை வளங்களோடு, தேவையான ஆளணி வளமும் இங்கு தாராளமாகவே உண்டு. எனவே யாழ்.வணிகர் கழகத்தின் அழைப்புக்கு செவிசாய்த்து, புலம்பெயரிகள் இங்கு முதலீடு செய்ய முன்வந்தால், அவர்களுக்கும், எங்களுக்கும் சமநேரத்தில் பொருளாதாரரீதியான ஏற்றம் உருவாகும். காலத்தின் குரலை காதுகளில் வாங்குவார்களாக புலம்பெயர் உறவுகள்?




# விபத்து உயிரிழப்பு நாட்டில் அதிகரிப்பு!



## மூன்று மாதங்களில் 562 பேர் சாவு

கொழும்பு, ஏப்.15

இந்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் மட்டும் வாகன விபத்துகளில் சிக்கி 592 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரையான காலப்பகுதியில் வாகன விபத்துகளில் 592 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஆயிரத்து 265 பேர் கடுமையான காயங்களுடனும், 2 ஆயிரத்து 145 பேர் சிறுகாயங்களுடனும் சிகிச்சைபெற்றுள்ளனர். 958 வாகனங்கள் விபத்துகளில் சேதமடைந்துள்ளன என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (எ-சி)

# அதிவேக வீதியில் நெரிசல்

கொழும்பு, ஏப்.15

தெற்கு அதிவேக வீதியில் காலி நோக்கிச் செல்லும் தடத்தில் நேற்றுக்காலை கடும் வாகனநெரிசல் ஏற்பட்டுள்ளது.

கௌனிகம மற்றும் தொடங்கொட சந்திப்புகளுக்கு அருகில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. பண்டிகைக் காலத்தில் தெற்கு அதிவேக வீதியை பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை அதிகரித்தமையே இந்தப் போக்குவரத்து நெரிசலுக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

# வரையறுக்கப்பட்டுள்ள கடவுச்சீட்டு விநியோகம்

கொழும்பு, ஏப்.15

கடவுச்சீட்டு வழங்கும் ஒருநாள் மற்றும் சாதாரண சேவைகள் இன்று முதல் நாளைமறுதினம்வரை வரையறுக்கப்பட்டுள்ளன என்று குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தத் தினங்களில் டோக்கன்கள் பகிர்வு மதியம் 12 மணிவரை மட்டுமே இடம்பெறும் என்றும் குடிவரவு மற்றும் குடியகல்வுத் துறை அறிவித்துள்ளது. ஒரு நாள் சேவைக்காக செயற்பட்டு வந்த 24 மணிநேர சேவை இந்த நாள்களில் இயங்காது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# பங்குச்சந்தைகளில் சாதக மாற்றங்கள்!

கொழும்பு, ஏப்.15

அமெரிக்கா ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் நிர்வாகம் பல வரிகளை இடைநிறுத்தியுள்ளதை அடுத்து சர்வதேச பங்குச்சந்தைகள் மீண்டும் உயர்ந்துள்ளன. ஜப்பானின் பங்குச்சந்தைக் குறியீடு 2 வீதத்தாலும், தென்கொரியாவின் பங்குச்சந்தைக் குறியீடு 1.1 வீதத்தாலும், அவுஸ்திரேலியாவின் பங்குச்சந்தை குறியீடு 0.7 வீதத்தாலும் உயர்ந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ- இ)

# நாட்டிலுள்ள குரங்குகள் 8 இலட்சத்துக்கும் அதிகம்

## கணக்கெடுப்பில் கண்டுபிடிப்பு

கொழும்பு, ஏப்.15

விவசாய அமைச்சு மேற்கொண்ட அண்மைய கணக்கெடுப்பின்படி நாட்டில் 8 இலட்சத்துக்கும் அதிகமான குரங்குகள் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. இவற்றில் சுமார் 4 இலட்சம் குரங்குகள் மக்கள் வசிக்கும் பகுதிகளில் நடமாடும் சிறு குரங்குகள் இனத்தைச் சேர்ந்தவை என்று தெரிவிக்கப்படுகின்றது. விலங்குகள் தொடர்பான விவசாய அமைச்சின் கணக்கெடுப்பு கிராமப்புறம், நகர்ப்புறம் மற்றும் விவசாயப் பகுதிகளில் அண்மையில் மேற்கொள்ளப்பட்டது. விவசாயப் பயிர்களை அழிக்கும் விலங்குகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில் சில தரவுப்பிழைகள் ஏற்பட்டமையால் மிகிந்தலை, கெக்கிராவ உள்ளிட்ட சில பகுதிகளில் மீண்டும் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. (எ-சி)


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com


நாளை புதன்கிழமை- சித்திரை 3
16.04.2025
சுபநேரம் : 04.34- 06.04
ராகுகாலம் : 12.04 - 01.34


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்தைப் பாதுகாப்பதற்கு முயல்கின்றார் அடைக்கலநாதன்

## கஜேந்திரன் குற்றச்சாட்டு

**வவுனியா, ஏப்.15**

**வவுனியாவில் ஆயிரத்து 500 சிங்களக் குடும்பங்களை குடியமர்த்த முயல்கிறார்கள். இதை சுட்டிக்காட்ட முதுகெலும்பற்ற அடைக்கலநாதன் வரவு - செலவுத் திட்டத்தில் நன்மை இருக்கின்றது என்று கூறி அதை ஆதரித்துள்ளார். சர்வதேச சமூகத்தின் முன்பாக அரசாங்கத்தைப் பாதுகாக்க முற்படுகின்றார் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செ.கஜேந்திரன் தெரிவித்துள்ளார். வவுனியாவில் நேற்றுமுன்தினம் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

மல்வத்து ஓயாத் திட்டத்தில் வவுனியா மாவட்டத்தில் ஆயிரத்து 500 சிங்களக் குடியேற்றங்களை குடியேற்றுவதற்கான நிகழ்ச்சி நடைபெறுகிறது. தந்திரிமலைப் பகுதியில் நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டுள்ளது. அங்கு ஆயிரத்து 500 குடும்பங்களுக்குக் காணிகள் வழங்க ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. இந்தத் திட்டத்தால் உண்மையில் அங்கு 15 முஸ்லிம் குடும்பங்கள் நிலங்களை இழந்தன. ஆனால் நீர்த்திட்டம் என்ற பெயரில் சர்வதேச நிதியில் எமது பிரதேசத்தில் சிங்களக் குடியேற்றத்தைக் கொண்டுவர முயல்கிறார்கள். இன்று வவுனியா வடக்குப் பிரதேசசபையில் 5 சிங்களப் பிரதிநிதிகள் வருவதற்கான வாய்ப்பு உருவாகியுள்ளது. சிங்களப் பேரினவாதம் மட்டும் எங்களது அழிவுக்குக் காரணமாக இருக்கவில்லை. காலங்காலமாக சிங்களப் பேரினவாதிகள் எங்களது தரப்பில் விலைபோகக்கூடிய, சலுகைகளுக்கு அடிபணியக்கூடியவர்களை பக்கத்தில் வைத்துக்கொண்டுதான் அனைத்துக் காரியங்களையும் ஒப்பேற்றியுள்ளார்கள். இந்த நிலைமை தடுக்கப்படவேண்டுமாக இருந்தால் எங்களது அணி வெற்றிபெறவேண்டும். பேரினவாதக் கட்சிகள் விரட்டியடிக்கப்படவேண்டும். கொள்கை மாறாத ஒரு தலைமைத்துவத்தைப் பலப்படுத்த, எமது சமத்துவமான நிர்வாகத்தை ஏற்படுத்த ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுங்கள். உள்ளூர் அதிகாரத்தைக் கைப்பற்றி தேசிய ரீதியல் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண ஆணை தாருங்கள் - என்றார். (எ-110)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஏப். 15

சைவ வாழ்வியலில் திருவிளையாடற் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவநெறிப்பிரகாசர் சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்தத் திருவிளையாடற் புராணச் சிறப்புச் சொற்பொழிவுத்தொடர் எதிர்வரும் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4மணிக்கு சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

பரஞ்சோதிமுனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலைநிகழ்வும்,இளஞ்சைவப்புலவர் பிரசங்கவாரிதி ச. நவநீதனின் "இந்திரன் பழி தீர்த்த படலம்" எனும் தலைப்பில் சொற்பொழிவும் இடம்பெறும். சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

++++++

யாழ்ப்பாணம், ஏப். 15

யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராணபடனத் தொடரின் 21ஆவது சொற்பொழிவு எதிர்வரும் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சிவநெறிப்பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ள நிகழ்வில் ஆலயத்தின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞானபானு, சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையும், பரிபாலனசபைத் தலைவர் சி. தயாநாதனின் தலைமையுரையும் இடம்பெறவுள்ளது. தொடர்ந்து சைவப் புலவர் பிரசங்க பூஷணம் க. கைலநாதனின் "தேவகிரிப் படலம்" எனும் விடயப்பொருளில் சிறப்புச்சொற்பொழிவை ஆற்றவுள்ளார். சொற்பொழிவிலிருந்து நீர்வைக்கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

# சூரிய மின்னாற்றல் துறைக்கு 550 மில்லியன் ரூபா நட்டம்!

புத்தாண்டுப் பரிசாக அரசாங்கம் சூரிய மின்சார ஆற்றல் துறைமீது தாக்குதல் நடத்தியுள்ளது. அதனால் வணிகர்களுக்கு 550 மில்லியன் ரூபாவும், அரசாங்கத்துக்கு ஆயிரத்து 100 மில்லியன் ரூபாவும் இழப்பு ஏற்பட்டுள்ளது என்று மின்சாரப் பயனர்கள் சங்கத்தின் தேசிய செயலாளர் சஞ்சீவ தர்மிகா குற்றஞ்சாட்டியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

புத்தாண்டுக் காலத்தில் சூரிய மின்சாரத்தை தேசிய மின்கட்டமைப்போடு இணைக்காமல் அரசாங்கம் தவிர்த்திருந்தது. இந்த நடவடிக்கையால் குறைந்த செலவில் உற்பத்திசெய்யப்பட்ட 7 இலட்சத்து 90 ஆயிரம் மின்அலகுகள் தேசிய மின்வலையமைப்பில் இருந்து விலக்கப்பட்டன. இதனால் அனல் மின் உற்பத்தி நிலையங்களை இயக்கவேண்டிய தேவை ஏற்பட்டமையால், கூடுதலாக 200 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இரசாயன உர விவகாரத்தில் கோத்தாபய ராஜபக்ச வீட்டுக்குச் சென்றதைப் போல, சூரியமின்சார விவகாரத்தில் அநுரகுமார திஸாநாயக்க வீட்டுக்குச் செல்லநேரிடும். அரசு அதிகாரத்துக்கு வந்தது திருடர்களைப் பிடிப்பதற்காக, ஆனால் இன்று மின்சார சபை திருடர்களை வளர்க்கும் இடமாக மாறிவிட்டது-என்றார். (எ-இ)

# அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், ஏப். 15

யாழ்ப்பாணம் நல்லூர் வடக்கு சட்டநாதர் வீதி கொன்றையடி திருவருள் மிகு வைரவப்பெருமான் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் காலை 9 மணிக்கும் மாலை 7 மணிக்கும் உற்சவம் நடைபெறும்.

எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை சப்பறத் திருவிழாவும், 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும், 28ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும், 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை பிராயச்சித்த அபிஷேகமும் மாலை வைரவர் மடையும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

மணல் கடத்தலில் ஈடுபட்ட

# யாழ். முன்னாள் எம்.பி. ஒருவரும் கைதாகலாம்



## சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.15

பிள்ளையான் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில் யாழ்ப்பாணத்திலும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஒருவரும் கைதாகலாம் என தமிழரசுக் கட்சியின் பதில் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வடமராட்சியில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

உள்ளூராட்சித் தேர்தல் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் நீதிமன்றில் முரண்பாடான தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அதேவேளை, தேசிய மக்கள் சக்தி யாழில் தேர்தல் விதிமுறைகளை மீறி பரப்புரை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

அமைச்சர் சண்டித்தனத்திலும் ஈடுபட்டுள்ளார்.

பிள்ளையான் கைது மற்றும் யாழில் மகேஸ்வரி மண் கம்பனி ஊழல் தொடர்பில் ஏற்கனவே முறைப்பாடுசெய்யப்பட்டது. இதன் முறைப்பாட்டு ஆணைக்குழுவில் அப்போது அநுரகுமார திஸாநாயக்கவே தலைவராகவும் இருந்தார். அதனால் யாழ்ப்பாணத்தில் ஒரு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கைதாவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன -என்றார். (எ-இ)

# சங்குக்கு வாக்களித்தால் மன்னாரை முன்னேற்றலாம்

## எஸ்.ஆர்.குமரேஸ் தெரிவிப்பு

சங்குச் சின்னத்தை நீங்கள் அனைவரும் ஒன்றிணைந்து பலப்படுத்துவதன் மூலம் உங்கள் கிராமத்தையும் மன்னார் நகரத்தையும் பலப்படுத்த முடியும் என ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் அங்கத்துவக் கட்சிகளில் ஒன்றான ஈ.பி.ஆர்.எல்.எப்.கட்சியின் மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆர்.குமரேஸ் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பாக மன்னார் நகரசபைத் தேர்தலில் போட்டியிடும் மன்னார் எழுத்தூர் வட்டார வேட்பாளர்களை ஆதரித்து மன்னார் பெரியகமம் பகுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

வீட்டுச்சின்னத்தில் நாங்கள் பல வருடங்கள் பயணம் செய்தோம். அந்த வீடு இன்று தமிழரசுக்கட்சியின் தனிச்சின்னம் என்பதால் அந்த வீடு இன்று தனியாகச் சென்றுவிட்டது. ஆனால் இன்று ஐந்து கட்சிகள் இணைந்து எமக்கான ஒரு பொதுச்சின்னமாக சங்குச் சின்னத்தில் பயணித்துக்கொண்டிருக்கிறோம். நீங்கள் எல்லாம் தமிழர்கள். எனவே தமிழ்க்கட்சிகளுக்கு வாக்களிக்கவேண்டும். யாராக இருந்தாலும் பரவாயில்லை. முதலில் தமிழ்க் கட்சிகளைத் தெரிவுசெய்யவேண்டும்-என்றார். (எ-33-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திருமதி பரலோகநாயகி பாலசுப்பிரமணியம்

அம்மன் வீதி, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், காளிகோவிலடி வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட பரலோகநாயகி பாலசுப்பிரமணியம் அவர்கள் நேற்று முன்தினம் (13.04.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி – பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா – அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சித்திரவேலாயுதம் மற்றும் நாகேந்திரம், பரமேஸ்வரி, கமலாதேவி, பவளக்கொடி காலஞ்சென்ற பரலோகநாதன் மற்றும் நித்தியானந்தன், மதியாபரணம், பற்குணராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், தவமலர், இரத்தினசிங்கம், காலஞ்சென்ற பாலசுந்தரம் மற்றும் செல்வராசா, உமாதேவி, புஸ்பராணி, ரங்கநாயகி, காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் யோகேஸ்வரி, கமலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2025) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல் :**
**குடும்பத்தினர்**
**077 540 9119, 077 968 3001**

(CS/0044) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 08 . 1949



மறைவு 13 . 04 . 2025

## உதயபுத்திரன் இராஜேஸ்வரி

விக்கினேஸ்வரா வீதி சங்கானையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட உதயபுத்திரன் இராஜேஸ்வரி அவர்கள் நேற்று முன்தினம் (13.04.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், திலாகரன், சுகந்தினி, சுதர்சினி, சுமதினி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.04.2025) புதன்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக முற்பகல் 11.00 மணியளவில் விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**விக்கினேஸ்வரா வீதி,**
**சங்கானை**

**தகவல் :**
**குடும்பத்தினர்**

(CS/57981) J-1

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 09.04.1949

மறைவு 13.04.2025

## திரு. கந்தையா மகாதேவன்

**தலைவர் யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை**
**ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாயகர் ஐக்கிய நாணய சங்கம்)**

- கூட்டுறவின் தனித்துவத்தை நிலை நாட்டுவதற்காக அல்லும் பகலும் உழைத்தீர்.
- கூட்டுறவில் சிக்கனம் சேமிப்பு போன்றவற்றின் மூலம் வாழ்வியலிலும் பொது வெளியிலும் உலகறியச் செய்தீர்.
- கூட்டுறவு துறைக்குள் நல்லதோர் பணியாளனாய் திகழ்ந்து கூட்டுறவுகளை முழுமையாக ஆளுகைசெய்து தொடர்ந்தும் ஆரம்ப மாவட்ட நிலைக் கூட்டுறவு அமைப்புக்களின் தலைவனாய் சேவையாற்றினீர்.
- மாவட்டம் மட்டுமல்லாது மாகாணம் மற்றும் தேசிய ரீதியாக கூட்டுறவாளர்களின் முழுமையான கூட்டுறவு குரலாக ஓங்கி ஒலித்தீர்கள்.
- உங்களின் கூட்டுறவுக் குரல் இப்பொழுதும் எமக்கு எதிரொலித்துக் கொண்டே இருக்கின்றது.
- உமது பாதையில் தொடர்ந்து நாமும்.

**தலைவர்கள், பணிப்பாளர்கள்,**
**பணியாளர்கள்**
**யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபையின்**
**அங்கத்துவ சங்கங்கள்**


(CR/0043) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15.04.2025 செவ்வாய்க்கிழமை

"ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ"

# மரண அறிவித்தல்



## செல்லையா நவரத்தினசாமி

கரம்பைக்குறிச்சி வரணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் செல்லையா நவரத்தினசாமி. (சமாதான நீதவான்) அவர்கள் நேற்று முன்தினம் (13.04.2025) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

ஓய்வு நிலை நிறைவேற்று அதிகாரியும் (BROWN &COMPANY Ltd). பகுதி நேர ஆங்கில, சிங்கள ஆசிரியரும் வரணி திக்கில் கந்தசுவாமி தேவஸ்தானத்தின் செயலாளரும் ஆகிய இவர் காலஞ்சென்ற செல்லையாப்பத்தர் - தங்கம்மா தம்பதியினரின் ஆசைமகனும், காலஞ்சென்ற சிவசோதி - பாக்கியம் தம்பதியினரின் மருமகனும், தங்கேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான இராசலட்சுமி அம்மா, கந்தசாமிப்பத்தர், சந்தானலட்சுமி அம்மா, ஆறுமுகசாமிப்பத்தர் மற்றும் மகாலிங்கப்பத்தர், முத்துலட்சுமி அம்மா, காலஞ்சென்ற சோதிலிங்கம் மற்றும் தனலட்சுமி அம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும்ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (15.04.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் கரம்பைக்குறிச்சி, வரணி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முள்ளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**கரம்பைக்குறிச்சி,**
**வரணி.**

**தகவல் :**
**மனைவி**

(CS/57980) J-1

# மாற்றுத் திறனாளிகள் புனர்வாழ்வுச் சங்க 17 வது வருடாந்த பொதுக்கூட்டம்

மாற்றுத்திறனாளிகள் புனர்வாழ்வுச் சங்க 17 வது வருடாந்த பொதுக்கூட்டம் 26.04.2025 ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு வைத்திய கலாநிதி ந.சிவராஜா ஞாபகார்த்த மண்டபத்தில் தலைவர் வைத்திய கலாநிதி சு.சிவபாதமூர்த்தி அவர்கள் தலைமையில் நடைபெறும். இக் கூட்டத்திற்கு தவறாது வருகை தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**நிகழ்ச்சி நிரல் :**

1. மங்கல விளக்கேற்றல்
2. மௌன இறைவணக்கம்
3. தலைமையுரை
4. 16வது பொதுக்கூட்ட அறிக்கை சமர்ப்பித்தல்
5. 01.06.2024 தொடக்கம் 25.04.2025 வரையான செயற்பாட்டறிக்கை சமர்ப்பித்தல்.
6. 2024ம் ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கை சமர்ப்பித்தல்.
7. ஏனைய விடயங்கள்.
8. புதிய நிர்வாக சபை உறுப்பினர்களை தெரிவு செய்தல்.
7. நன்றியுரை.

**சுஜீவா சிவதாஸ்**
**செயலாளர்**

**47/1 ஆடியபாதம் வீதி,**
**திருநெல்வேலி மேற்கு,**
**யாழ்ப்பாணம்.**
**15.04.2025**

(CS/57977) J-1

# பீஜி தீவில் நில நடுக்கம்

நியூயோர்க், ஏப்.15

பிஜி தீவில் நேற்று அதிகாலை 1.32 மணியளவில் 6.5 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் பதிவாகியுள்ளது என்று அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கம் பூமிக்கு 174 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்படுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேத விவரங்கள் தெரியவரவில்லை. அதே வேளை, நேற்றுமுன்தினம் மியான்மர் மற்றும் தஜிகிஸ்தானில் மிதமான நிலநடுக்கம் பதிவாகியிருந்தன. (எ-இ)

## சைவபரிபாலன சபை - யாழ்ப்பாணம்
## அகில இலங்கை சைவநெறி மற்றும் தமிழ்மொழியும் நுண்ணறிவும் தேர்வு விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள்

அகில இலங்கை சைவநெறி (தரம் 06 முதல் 12 வரை) மற்றும் தமிழ் மொழியும் நுண்ணறிவும் (தரம் 06 முதல் 08 வரை) தேர்வுகளுக்குரிய விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் நடைபெறுகின்றது. மதிப்பீட்டுப் பணியில் இணைந்து கொள்ள ஆர்வமும் தகுதியும் உள்ளவர்கள் சபை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும். பணிகளுக்குரிய கௌரவ வேதனம் வழங்கப்படும். தொ.பே.இல: 021 222 7678.

**பரீட்சை செயலாளர்**

# மரண அறிவித்தல்

**தோற்றம்**
19 . 07 . 1938



**மறைவு**
13 . 04 . 2025

## திருமதி பத்திநாதர் நேசம்மா

ஊராவில் காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், கீரிமலை வீதி, பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்திநாதர் நேசம்மா அவர்கள் நேற்று முன்தினம் (13.04.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை - அருளம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பிரான்சிஸ் சேவியர் - லூயிசாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சேவியர் பத்திநாதரின் அன்பு மனைவியும், பிறின்ஸ்சிலி பயஸ் (France), காலஞ்சென்ற ஜெயராட் ஜொய்ஸ்சிலி பயஸ், அருட்சகோதரி மேரி வினோதா AC (ஆசிரியை MN/ அடம்பன் M.M.V) வினிவிறேற் றொபல்னா (Negombo), அருட்சகோதரி வேஜினி பப்ரிஸ்ரா HC (வைத்தியர் Anasthesia, போதனா வைத்தியசாலை - யாழ்ப்பாணம், திருச்சிலுவை சுகநல நிலையம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், எடித் அன்றியா, சுஜிதா (சூட்டி), காலஞ்சென்ற அலோசியஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும், மெல்வின் (Accountant Dubai), றொபின் - சார்ளற் (Nuclear - Engineer), அருட்தந்தை டிலுஷன் OMI - (ஆன்மீக குரு போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்), அருட் சகோதரன் பிறவின் (Engineer), மரிய கரோலின் (QS - UK), டினோஜா - விதன் (யாழ் பல்கலைக் கழகம்), யூலியட் - வைத்தியர் (France), கிளௌடியா (வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி, 2ஆம் வருட மாணவி), ஜெனிற்றா (3ம் வருட மாணவி யாழ் பல்கலைக் கழகம்), டனிஸ்ரன் - (மாணவன் ATI), லியோனிஸ் மாணவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், Aude இன் பாசமிகு பூட்டியும், காலஞ்சென்றவர்களான அன்னம்மா, மரியம்மா, இராசேந்திரம், பிலோமினா ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான அன்னம்மா, அருளம்மா, அந்தோனிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (16.04.2025) புதன்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித அந்தோனியார் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கீரிமலை வீதி,**
**பண்டத்தரிப்பு.**

**தகவல்: பிள்ளைகள்**
**அருட்சகோதரி வினோதா AC**
**அருட் சகோதரி Dr வேஜினி பப்ரிஸ்ரா HC**
**அருட் தந்தை டிலுஷன் OMI**
021 205 1992, 076 532 4037

(CS/ 30040) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்ப்பு நாயால் பறிபோன உயிர்

கொழும்பு, ஏப்.15


மினுவாங்கொடை, தெவலபொல பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு முதியவர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று மினுவாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை நடந்துள்ளது.

கொலை செய்யப்பட்டவரின் வளர்ப்பு நாய் அயல் வீட்டுக்குள் நுழைந்துள்ளது.

அதையடுத்து அயல் வீட்டில் வசிக்கும் நபருக்கும் முதியவருக்கும் இடையில் தகராறு ஏற்பட்டுள்ளது. தகராறு முற்றியதில் அயல்வீட்டில் உள்ளவர் முதியவரை கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொலை செய்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மினுவாங்கொடை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (எ-இ)

# கண்ணீர் அஞ்சலி



## அமரர் கந்தையா மகாதேவன்


வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் முன்னாள் பணிப்பாளர் சபை உறுப்பினரும் யாழ் மாவட்ட கூட்டுறவு சபையின் தற்போதய தலைவரும் ஆகிய அமரர் கந்தையா மகாதேவன் அவர்களின் மறைவு கூட்டுறவுத்துறைக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். ஏழாலை மேற்கு விநாயகர் ஐக்கிய நாணய சங்கத்தின் தலைவராக நீண்ட காலம் பணியாற்றிய அமரர் கந்தையா மகாதேவன் அவர்கள் கிராமிய பிராந்திய மாவட்ட மட்டங்களில் பல்வேறு கூட்டுறவு நிறுவனங்களின் தலைவராகவும் நிர்வாக சபை உறுப்பினராகவும் இன்னும் பொதுச்சபை பிரதிநிதியாகவும் இருந்து கூட்டுறவுத்துறைக்கும் தனது கிராமத்தின் வளர்ச்சிக்கும் ஆற்றிய பணிகள் மிக பயனுறுதி மிக்கது. அன்னாரின் கூட்டுறவு பணிகளை நன்றியுடன் நினைவு கொள்வதோடு அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து ஆத்ம சாந்திக்கு பிரார்த்திப்போமாக

ஓம் சாந்தி

தலைவர், பணிப்பாளர், பணியாளர்கள்
வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி

# மரண அறிவித்தல்

தோற்றம் 09 . 04 . 1949



மறைவு 13 . 04 . 2025

## கந்தையா மகாதேவன்

(தலைவர், கூட்டுறவு சபை, யாழ் மாவட்டம்) (தலைவர், ஏழாலை மேற்கு ஸ்ரீவிநாயகர் ஐக்கிய நாணய சங்கம்)
(போசகர், முத்தமிழ் மன்றம் ஏழாலை)

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் சூராவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா மகாதேவன் அவர்கள் நேற்று முன்தினம் (13.04.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-பூரணம் தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான அப்பையா-பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் இரஞ்சினிதேவியின் பாசமிகு கணவரும் சசிபாரதி (லண்டன்), மயூரி (ஆசிரியை-கிளி/பூநகரி மத்திய கல்லூரி), மதுரா (ஏழாலை மேற்கு ஸ்ரீவிநாயகர் ஐக்கிய நாணய சங்கம்), ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவச்சந்திரன் (லண்டன்), அரவிந்தன் (உற்பத்தி இணைப்பாளர், Nefad Foundation), மதுசூதனன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சுஜிந் (லண்டன்), ஜஸ்மிதன் (லண்டன்), நயனிகா ஆகியோரின் அன்புப் பேரனும் உமாதேவி, காலஞ்சென்ற இராசகுமாரியம்மா மற்றும் பவளராணி (லண்டன்), பத்மநாதன், இலங்கநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம், சிவலிங்கம், சிவநாதன் ஆகியோரின் மைத்துனரும் சோதிராஜா, காலஞ்சென்ற குணராசா மற்றும் பாக்கியராசா, வேல்ராசா, செந்தில்குமரன், ரஞ்சிதமலர், ரதிக்குமாரி, ரஞ்சனா, ஜெயந்தி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (15.04.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

விழிசிட்டி வீதி,
சூராவத்தை, சுன்னாகம்.

(CS/30039) J-1

தகவல்: குடும்பத்தினர்
077 611 8227

# அந்தியேட்டி சபிண்டிகரண அழைப்பு



தோற்றம் 03.06.1962

மறைவு 18.03.2025

கடந்த 18.03.2025 செவ்வாய்க்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் குலசிங்கம் குணரத்தினம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (15.04.2025) செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை மறுதினம் (17.04.2025) வியாழக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கோவில் குடியிருப்பு,
கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்
077 248 7171

(CS/57979) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏற்றுமதியை நிறுத்திய சீனா அழவாங்குமா அமெரிக்கா?

**பீஜிங், ஏப்.15**

**அமெரிக்காவுக்கு கனிமங்கள், உலோகம், காந்தம் போன்றவற்றை ஏற்றுமதி செய்வதைச் சீனா நிறுத்தியுள்ளது என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பல உலக நாடுகளுக்கு பரஸ்பர தீர்வைவரியை அறிவித்திருந்தார். அதற்கு ஏனைய நாடுகள் பணிந்த நிலையில், சீனா தொடர்ந்து ஏட்டிக்குப் போட்டியாக வரிகளை அதிகரித்தது. சீனப் பொருள்கள் மீது அமெரிக்கா 145 சதவீத வரியையும், அமெரிக்க பொருள்கள் மீது சீனா 125 சதவீத வரியையும் விதித்திருந்தன.

இந்தப் பின்னணியில் அமெரிக்காவுக்குக் கனிமங்கள், உலோகம், காந்தம் உள்ளிட்டவற்றின் ஏற்றுமதியைச் சீனா நிறுத்தியுள்ளது. இதனால் அமெரிக்காவின் ஆயுதங்கள், மின்னணுவியல், வாகன உற்பத்தியாளர்கள், எரோஸ்பேஸ் உற்பத்தியாளர்கள், செமிகண்டக்டர் நிறுவனங்கள் மற்றும் பிற நுகர்வோர் பயன்பாட்டுக்கான பொருள்களைத் தயாரிக்கத் தேவையான மூலப்பொருள்களுக்குப் பற்றாக்குறை ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவுக்கு எதிரான வர்த்தகப் போரில் சீனா ஏற்றுமதிக்கு புதிய நெறிமுறைகளை வகுத்து வருகிறது. ஏற்கனவே கார்கள் முதல் ஏவுகணைகள் வரை தயாரிக்கத் தேவையான காந்தங்கள் மற்றும் மூலக்கூறுகளின் ஏற்றுமதி சீனத் துறைமுகங்களில் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளன என்று நியூயோர்க் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

சீனா வகுத்துவரும் புதிய நெறிமுறைகள் நடைமுறைக்கு வந்தால் அமெரிக்காவின் இராணுவத் தளபாட உற்பத்தி உட்பட பல நிறுவனங்களின் உற்பத்தி தடைப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

பாதுகாப்பு, மின்சார வாகனம், எரிசக்தி மற்றும் மின்னணுவியல் துறைகளில் பயன்படுத்தப்படும் 17 கனிமங்களின் தொகுப்பான 'உலகின் அரிய மண் தாது'க்களில் சுமார் 90 சதவீதத்தை சீனா உற்பத்திசெய்கிறது. சமாரியம், காடோலினியம், டெர்பியம், டிஸ்ப்ரோசியம், லுடீடியம், ஸ்காண்டியம் மற்றும் யட்ரியம் ஆகியவை உட்பட ஏழு வகை நடுத்தர மற்றும் கனரக அரிய மண் தாதுக்கள் ஏற்றுமதியைக் கட்டுப்படுத்த சீனா நடவடிக்கை எடுத்துள்ளது என்று கூறப்படுகிறது. சீனாவின் இந்தப் புதிய கட்டுப்பாடுகள் அமெரிக்க உற்பத்தியைப் பெருமளவில் பாதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (எ-இ)

அப்பம் சுடக்கூடிய வேலையாட்கள் தேவை
கொடிகாமம் நட்சத்திரமஹால் திருமண மண்டபத்தில் உள்ள உணவகத்தில் அப்பம் சுடக்கூடியவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளவும்
074 105 7593
074 300 1721

# அமெரிக்காவில் தங்கியுள்ள வெளிநாட்டவருக்கும் ஆப்பு

கொழும்பு, ஏப்.15

அமெரிக்காவில் 30 நாள்களுக்கு மேல் தங்கி இருக்கும் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் உடனடியாகத் தங்களைப் பற்றிய விவரங்களை உள்துறைப் பாதுகாப்பு அரச அலுவலங்களில் பதிவுசெய்ய வேண்டும் என்று அந்த நாட்டின் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

பதிவுசெய்யப்படவில்லையாயின் அவர்கள் மீது அபராதம், சிறைத்தண்டனை உள்ளிட்ட நடவடிக்கைள் மேற்கொள்ளப்படும் என்றும் பாதுகாப்பு அமைச்சு எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக அமெரிக்காவின் பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

அமெரிக்காவில் 30 நாள்களுக்கு மேல் தங்கி இருக்கும் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் உடனடியாகதத் தங்களைப் பற்றிய விவரங்களை உள்துறை பாதுகாப்பு அரச அலுவலங்களில் பதிவுசெய்யவேண்டும். அவ்வாறு தங்கியிருப்பவர்கள் தாமாக வெளியேறினால் பாதுகாப்பானது. நீங்கள் விரும்பும் விமானத்தில் பயணம் செய்யும் சலுகை கிடைக்கும். நீங்களாகவே வெளியேறும் பட்சத்தில் அமெரிக்காவில் சம்பாதித்த பணத்தை நீங்களே வைத்துக் கொள்ளமுடியும். நாங்களாகவே வெளியேற்றாமல் நீங்களே வெளியேறினால் எதிர்காலத்தில் சட்டப்படி அமெரிக்காவுக்கு வரமுடியும். இல்லாவிட்டால் அமெரிக்காவுக்கு வர நிரந்தரமாகத் தடை விதிக்கப்படும்.

இந்த முடிவு அமெரிக்காவில் எச்.1 பி மாணவர் விசா பெற்றவர்களை நேரடியாக பாதிக்காது. எச்1 பி விசாவில் உள்ள ஒருவர் வேலையை இழந்திருந்தால் அவர்கள் குறிப்பிட்ட காலத்துக்குள் நாட்டைவிட்டு வெளியேறவேண்டும்-என்றுள்ளது. (எ-இ)

# எகிறிப் பாய்ந்தது தங்கத்தின் விலை

கொழும்பு, ஏப்.15


உலகளாவிய பொருளாதார நிச்சயமற்ற தன்மைகளால் தங்கத்தின் விலை சாதனையைப் பதிவுசெய்துள்ளது. ஒரு அவுன்ஸ் தங்கம் 3 ஆயிரத்து 235 டொலரை எட்டியுள்ளது என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

புவிசார் அரசியல் பதற்றங்கள், அமெரிக்கா சீனா இடையிலான வர்த்தக மோதல்கள், உலகளாவிய வர்த்தகக் கட்டுப்பாடுகள் என்பவற்றால் முதலீட்டாளர்கள் தங்கத்தை நோக்கித் திரும்பியுள்ளனர். உலகப் பங்குச் சந்தைகளில் ஏற்பட்ட 10 வீத சரிவு, அமெரிக்க மத்திய வங்கியின் வட்டி வீதக் குறைப்பு எதிர்பார்ப்புகள் மற்றும் டொலரின் மதிப்பு சரிவு ஆகியவையும் தங்கத்தின் தேவையை அதிகரித்துள்ளன.

கடந்த ஜனவரி மாதம் 2 ஆயிரத்து 796 டொலராக இருந்த தங்கத்தின் விலை, கடந்த பெப்ரவரி மாதம் 2 ஆயிரத்து 900 டொலராகவும், மார்ச் மாதம் 3 ஆயிரத்து 128 டொலராகவும் உயர்ந்து. கடந்த 12ஆம் திகதி 3 ஆயிரத்து 200 டொலராகக் காணப்பட்ட தங்கத்தின் விலை, தற்போது 3 ஆயிரத்து 235 டொலரை எட்டியுள்ளது.

கோல்ட்மேன் சாக்ஸ் நிறுவனம் 2025ஆம் ஆண்டு இறுதிக்குள் தங்கம் 3 ஆயிரத்து 300 டொலரை எட்டும் எனவும், பேங்க் ஒவ் அமெரிக்கா 2026 ஆம் ஆண்டு 3 ஆயிரத்து 350 டொலரை எட்டும் என்றும் கணித்துள்ளன. ஆயினும் புவிசார் பதற்றங்கள் குறைவடைந்தால் விலை சீராகலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)





# தவறுகளைச் சரிசெய்ய அமெ. முயலவேண்டும்

## சீனா வலியுறுத்து

அமெரிக்கா விதித்துள்ள வரியை முற்றிலுமாக இரத்துச் செய்யவேண்டும் என்று சீனா வலியுறுத்தியுள்ளது. அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், உலக நாடுகள் பலவற்றுக்குப் பரஸ்பர தீர்வைவரியை அண்மையில் அறிவித்திருந்தார். இந்த வரி உயர்வு கடந்த வாரம் நடைமுறைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டிருந்தபோதும், தற்போது 90 நாள்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது, ஆனால் சீனாவுக்கு விதிக்கப்பட்ட விரியை 145 வீதமாக டொனால்ட் ட்ரம்ப் அதிகரித்துள்ளார். இந்த நடவடிக்கைக்குச் சீனா கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. அமெரிக்கா தனது தவறுகளைச் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும். பரஸ்பர வரிகள் என்ற தவறான நடைமுறையை முற்றிலுமாக இரத்துச்செய்யவேண்டும் என்று சீனா வர்த்த அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# அகதி முகாம் மீது மிலேச்சத் தாக்குதல்

## 114 பேர் உயிரிழப்பு

லண்டன், ஏப்.15

சூடானில் உள்ள அகதி முகாம் ஒன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 114 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சூடானின், தெற்கு டிருப் மாகாணம் எல் பிரெஷ் நகரில் உள்ள அகதிகள் முகாம் மீது துணை இராணுவப்படையினர் நேற்றுமுன்தினம் திடீரென துப்பாக்கிச்சூடு நடத்தியதில், அகதிகள் முகாமில் வசித்து வந்த பொதுமக்களில் 114 பேர் உயிரிழந்தனர். இறந்தவர்களில் 20 குழந்தைகள் மற்றும் 9 சுகாதாரப் பணியாளர்கள் அடங்குவர். இந்தத் தாக்குதலால் கிட்டத்தட்ட 2 ஆயிரத்து 400 பேர் முகாம்களிலிருந்து வெளியேறியுள்ளனர்.

அதேவேளை, 2023 ஆம் ஆண்டு ஏப்ரலில் சூடானில் உள்நாட்டுப் போர் ஆரம்பித்ததில் இருந்து 24 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் மோதல்களில் சிக்கி உயிரிழந்துள்ளனர் என்று ஐ.நா. தெரிவித்துள்ளது. (எ-இ)

# பிரிட்டனின் எம்.பி.யை திருப்பியனுப்பிய சீனா

லண்டன், ஏப்.15

பிரிட்டனின் லிபரல் டெமாக்ரடிக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான வேரா ஹோப்ஹவுஸ் சீனாவுக்குள் நுழைவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பெண் நாடாளுமன்ற உறுப்பினரது மகன் சீனாவின் தன்னாட்சிப் பிராந்தியமான ஹொங்கொங்கில் வசித்து வருகிறார். அவரைப் பார்ப்பதற்காக வேரா தனது கணவருடன் சீனா சென்றிருந்தார்.

ஆனால் சீனாவின் மனித உரிமைகள் தொடர்பான கருத்துகளை வெளிப்படுத்தியமைக்காக ஹொங்கொங் விமானநிலையத்தில் அவர் தடுத்து நிறுத்தப்பட்டார்.

அதேசமயம் அவரது கணவருக்கு எந்தத் தடையும் விதிக்கப்படவில்லை. பின்னர், வேரா விமானம் மூலம் பிரிட்டனுக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.

சீனாவின் இந்த நடவடிக்கைக்கு இங்கிலாந்து வெளியுறவுத்துறை கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றுப் பிரசித்திபெற்ற மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த தேர்த் திருவிழா சித்திரைப் புத்தாண்டு நன்னாளான நேற்றுத் திங்கட்கிழமை ஆயிரக்கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் சிறப்பாகவும், பக்திபூர்வமாகவும் நடைபெற்றது. (ஏ-66)





# திருக்கேதீஸ்வரத்தில் புத்தாண்டு வழிபாடுகள்







மன்னார், ஏப்.15

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் 'விசுவாவசு' சித்திரை புத்தாண்டு சிறப்பு வழிபாடுகள் நேற்றுக் காலை முதல் ஆலய பிரதம குரு கருணாநந்த குருக்கள் தலைமையில் இடம்பெற்றது.

அதிகாலை 4 மணியளவில் சுப்ரபாதமும், 5 மணியளவில் உசற்காலப் பூசையும், 5.15 மணியளவில் சங்கற்பம், அபிஷேகமும், 6 மணியளவில் சுற்றுப் பூசைகளும், 6.15 மணியளவில் வசந்த மண்டப பூசையும் 6.45 மணி அளவில் சங்கிராந்தி அபிஷேகமும் இடம் பெற்றன.

தொடர்ந்து காலை 7:30 மணியளவில் கை விசேஷம் வழங்கப்பட்டு காலை 8.15 மணியளவில் பொங்கல் வைக்கப்பட்டு சிறப்பு பூஜைகள் இடம்பெற்றன.

புத்தாண்டு பூசை வழிபாடுகளில் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் கலந்து கொண்டனர். (ஏ-56)

## நீச்சல்...

அவர் நீச்சல் குளத்தில் மூழ்குவதை அவதானித்தவர்கள், அவரை உடனடியாக மீட்டு மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். எனினும், சிகிச்சையின்போது அவர் உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை வவுனியாப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-ம-110)

## இலங்கையில்...

உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு நீர்கொழும்பில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரையின்போதே சஜித் இவ்வாறு கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று மருத்துவமனைகளில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. சுகாதாரம் என்பது சேவையல்ல, அது மனித உரிமையும், அடிப்படை உரிமையுமாகும். இலவச மருத்துவம் என்ற மக்களின் மனித உரிமையைக்கூட அரசாங்கத்தால் வழங்கமுடியவில்லை. அரச மருத்துவமனைகளில் அத்தியாவசிய மருந்துகள் இல்லை. இலவச மருத்துவ சேவை காணப்படும் மருத்துவமனைகளில் மருந்துகள் இல்லாமையால் உயிர்காக்கும் மருந்துகளைக் கூட தனியார் மருந்தகங்களில் வாங்கும் நிலைக்கு நாடு வந்துள்ளது. இந்தப் பிரச்சினைகளுக்கு அரசாங்கத்திடம் பதில் இல்லை.

வருமான மூலங்கள் வீழ்ச்சியடைந்து, வாழ்வாதாரங்கள் வீழ்ச்சியடைந்து, வருமானம்கூட குறைந்துள்ள இவ்வேளையில், பொருள்களின் விலைகளும், வாழ்க்கைச் செலவுகளும் வேகமாக அதிகரித்துவருகின்றன. வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் மக்கள் தமது பிள்ளைகளுக்கு கல்வியை வழங்கக்கூட முடியாத நிலை உருவாகி வருகிறது.

காற்று, சூரிய ஒளி மற்றும் நீர் ஆகியவற்றைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் விலை குறைவாக இருந்தாலும், புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கு அரசு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. மாறாக, டீசல் மற்றும் அனல் மின்சாரம் பயன்பெறும் திட்டத்தையே .தொடர்ந்தும் முன்னெடுத்துள்ளது. சதிகாரர்களால் மின்சாரத்துறை கையகப்படுத்தப்பட்டுள்ளது.

மின்சாரத்தை அதிக விலைக்கு பாவனையாளர்களுக்கு வழங்கும் மாபியாக்களிடம் மின்சாரத்துறை கையளிக்கப்பட்டுள்ளது. அந்த சதியை முறியடிக்கும் இயலுமை இந்த அரசாங்கத்திடம் இல்லை. புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கு முன்னுரிமை வழங்குவோம் என மேடைக்கு மேடை கூறிவந்த ஜனாதிபதி அநுர, தற்போது மின்சார மாபியாக்களின் சொற்படி நடக்க ஆரம்பித்துள்ளார் -என்றார். (அ-ம-இ)

## இந்த வருடம்...

ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மேலும் தெரிவித்ததாவது:-

ஏப்ரல் மாதத்தின் முதல் 9 நாள்களில் மட்டும் 56 ஆயிரத்து 567 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர். ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து ஏப்ரல் மாதம் 9ஆம் திகதிவரையான காலப்பகுதிக்குள் 7 லட்சத்து 78 ஆயிரத்து 843 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர். இவர்களில் அதிகளவான சுற்றுலா பயணிகள் இந்தியாவில் இருந்து வந்துள்ளனர். இந்தியாவில் இருந்து ஒரு இலட்சத்து 28 ஆயிரத்து 910 பேர் இலங்கைக்கு வந்துள்ளனர்.

அதேநேரம், ரஷ்யாவிலிருந்து 99 ஆயிரத்து 731 சுற்றுலாப் பயணிகளும், ஐக்கிய இராச்சியத்திலிருந்து 77 ஆயிரத்து 384 சுற்றுலாப் பயணிகளும், ஜேர்மனியிலிருந்து 53 ஆயிரத்து 920 சுற்றுலாப் பயணிகளும், சீனாவிலிருந்து 41 ஆயிரத்து 478 சுற்றுலாப் பயணிகளும், பிரான்ஸிலிருந்து 46 ஆயிரத்து 289 சுற்றுலாப் பயணிகளும், அவுஸ்திரேலியாவிலிருந்து 31 ஆயிரத்து 390 சுற்றுலாப் பயணிகளும் இலங்கைக்கு வந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ-எ-இ)

## வீதியோரமாக...

வருடன் கதைத்துக்கொண்டிருந்த போதே, அதிவேகமாக வந்த மோட்டார் சைக்கிள் அவரை மோதியுள்ளது. மயங்கிய நிலையில் மீட்கப்பட்ட அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், அவர் சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி மேற்கொண்டார்.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் உட்பட மேலும் இருவர் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## தென்னையால்...

ருந்த பொச்சுமட்டை அறுந்ததைத் தொடர்ந்தே அவர் மரத்தில் இருந்து தவறி வீழ்ந்துள்ளார். அவரை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டுசென்ற போதிலும், குறித்த நபர் முன்னதாகவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## தற்போதைய...

கிளிநொச்சி காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளால் நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போதே, கடந்த அரசாங்கங்களைப் போல தற்போதைய அரசாங்கத்தின் மீதும் நம்பிக்கையற்ற நிலையில் தாம் உள்ளதாக காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் கூறியுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சியைப் பொறுப்பெடுத்து ஆறு மாதங்கள் நிறைவடைந்துள்ளன. எனினும், எங்களின் கோரிக்கைகளுக்கு காத்திரமான பதிலொன்று வழங்கப்படவில்லை.

உள்ளக விசாரணையூடாக வழங்கப்படும் பதில்களும், தீர்வுகளும் போர்க் குற்றவாளிகளைக் காப்பாற்றும் விதமாகவே அமையும். ஆதலால்தான் நாங்கள் சர்வதேச விசாரணையைக் கோருகின்றோம். எனவே, எமது வாக்குகளைப் பெற்று ஆட்சிக்குவந்த அரசாங்கம், எங்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற முன்வரவேண்டும்-என்றனர். (அ-ம-இ)

## போதைப்பொருள்...

அடையாளம் காண்பதற்கான விசேட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கையில் தேவைக்கு ஏற்ப விசேட அதிரடிப்படையினர், இராணுவத்தினர் மற்றும் மோப்பநாய் பிரிவினரின் உதவிகளைப் பெறுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

சட்டவிரோதப் போதைப்பொருள்களைக் கடத்துதல், தம்வசம் வைத்திருத்தல் மற்றும் விற்பனை செய்தல் ஆகிய குற்றங்களுக்காகக் கைதுசெய்யப்படும் சந்தேநபர்களுக்கான தடுப்புக்காவல் உத்தரவுகளைப் பெறுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ-எ-இ)

## வடக்கில்...

வடமாகாணம், வடமத்திய மாகாணம், மேல் மாகாணம், தென்மாகாணம், கிழக்கு மாகாணம் ஆகியவற்றில் வெப்பநிலை உச்சம்பெறும். குறிப்பாக, இரத்தினபுரி மற்றும் மொனராகலை மாவட்டங்களில் வெப்பநிலை மேலும் அதிகரிக்கும்.

இதேவேளை, மேல் மாகாணம், சப்ரகமுவ மாகாணம், மத்திய மாகாணம், தென் மாகாணம் மற்றும் ஊவா மாகாணம் ஆகியவற்றிலும், அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் பிற்பகல் அல்லது இரவு நேரங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்-என்றுள்ளது. (அ-எ-இ)

## ஏப்ரல்...

உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு, நாடெங்கும் தேர்தல் பரப்புரைகள் தற்போது தீவிரம் பெற்றுள்ளன. தேசிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர்களும், இதர கட்சிகளின் முக்கியஸ்தர்களும் கொழும்புக்கு வெளியில் தற்போது பரப்புரைகளை முன்னெடுத்து வருகின்றனர். ஏப்ரல் இறுதி வாரத்தில் கொழும்பை மையப்படுத்தி அவர்களின் பரப்புரைகள் அமையவுள்ளன என்று தெரியவருகின்றது.

அதுபோல், ஏனைய கட்சிகளும் ஏப்ரல் மாத்தின் இறுதி வாரத்தில் உச்சக்கட்டப் பரப்புரைகளை முன்னெடுக்கத் தயாராகியுள்ளன. மே மாதம் முதலாம் திகதி தொழிலாளர்தினம் என்பதால், அதை மையப்படுத்திய பேரணிகளையும் முன்னெடுத்து பலம் காட்டுவதற்கு கட்சிகள் வியூகம் வகுத்துள்ளன என்றும் தெரியவருகின்றது. மே மாதம் மூன்றாம் திகதி நள்ளிரவுடன் தேர்தல் பரப்புரைகள் முற்றாக நிறைவுக்கு வரவுள்ளன. ஆதலால், தொழிலாளர் தினமே இம்முறை உள்ளூராட்சித் தேர்தலின் இறுதிப் பரப்புரைப் புள்ளியாக அமையும் என்று அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தென்மராட்சிக் கல்வி வலயமட்ட தரம் 3 மாணவர்களுக்கான கணிதமுகாம் உசன் இராமநாதன் மகாவித்தியாலய மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. கணித முகாமில் வித்தியாலய மாணவர்களுடன் ஊட்டப்பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுமாக மொத்தம் 120 மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர். (ச-25,9)



# யானை தாக்கியதில் குடும்பஸ்தர் மரணம்

கொழும்பு, ஏப்.15

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 37ஆம் கிராமத்தில், தமிழ் புத்தாண்டு தினமான நேற்று அதிகாலை, காட்டு யானையின் தாக்குதலில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அதிகாலை ஒரு மணியளவில் வீட்டுமுற்றத்தில் நண்பர்களுடன் புத்தாண்டைக் கொண்டாடி விளையாடிக்கொண்டிருந்த 31 வயதுடைய இராசதுரை சசிகரன் என்பவரே யானையின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார். யானை தாக்கியதில் படுகாயமடைந்த அவர், களுவாஞ்சிக்குடி மருத்துவமனைக்குக் கொண்டுசென்றபோதும் அதிகாலை 4.30 மணியளவில் உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் உடல், உடற்கூற்று பரிசோதனைக்காக களுவாஞ்சிக்குடி மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக வெல்லாவெளிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-இ)



யாழ்ப்பாணம் உரும்பிராய் மேற்கு ஸ்ரீ வைத்தீஸ்வரா சனசமூக நிலையம், மகளிர் சங்கம், விளையாட்டுக்கழகம் மற்றும் கலைக்குழு ஆகியன இணைந்து நடத்திய சர்வதேச மகளிர்தின நிகழ்வுகள் வைத்தீஸ்வரா பொன்விழா மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றன. (ச-41-20)



க. பொ.த. உயர்தரப் பரீட்சையில் வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் மாவட்ட மட்டத்தில் முதலாமிடத்தைப்பெற்று திறமைச் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு தொண்டமானாறு வெளிக்கள நிறுவனத்தால் கடந்த வாரம் நடத்தப்பட்டது. நிகழ்வில் பிரதம விருந்தினராக இளைப்பாறிய வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார் கலந்துகொண்டார். (ச-20)



# சாரதிகளுக்கு விடுக்கப்பட்ட முக்கியமான அறிவுறுத்தல்!

கொழும்பு, ஏப்.15

அதிவேக நெடுஞ்சாலைகளில் வாகனங்களை ஓட்டும்போது வேக வரம்புகள் தொடர்பாக சாரதிகள் அனைவரும் அவதானமாக இருக்கவேண்டும் என்று போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் பணிப்பாளர் அறிவுறுத்தியுள்ளார்.


புத்தாண்டுக் காலத்தில் அதிவேக நெடுஞ்சாலைகளில் வாகனப் போக்குவரத்து நெரிசல் அதிகரிப்பதன் விளைவாக விபத்துகள் அதிகரிக்கும் வாய்ப்புள்ளதால், இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதிவேக நெடுஞ்சாலைகளில் பல்வேறு இடங்களில் வாகனங்களை நிறுத்திச் செல்பி எடுப்பது அல்லது அரட்டை அடிப்பது போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதை சாரதிகள் முற்றிலுமாகத் தவிர்க்கவேண்டும். அதிவேக நெடுஞ்சாலைகளில் உள்ள விதிமுறைகளை அனைவரும் கடைப்பிடிக்கவேண்டும் என்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (எ-இ)


# மரண அறிவித்தல்

தோற்றம் 09 . 04 . 1949

மறைவு 13 . 04 . 2025



**கந்தையா மகாதேவன்**

(தலைவர், கூட்டுறவு சபை, யாழ் மாவட்டம்) (தலைவர், ஏழாலை மேற்கு ஸ்ரீவிநாயகர் ஐக்கிய நாணய சங்கம்)
(போசகர், முத்தமிழ் மன்றம் ஏழாலை)

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் சூராவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா மகாதேவன் அவர்கள் நேற்று முன்தினம் (13.04.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-பூரணம் தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான அப்பையா-பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் இரஞ்சினிதேவியின் பாசமிகு கணவரும் சசிபாரதி (லண்டன்), மயூரி (ஆசிரியை-கிளி/பூநகரி மத்திய கல்லூரி), மதுரா (ஏழாலை மேற்கு ஸ்ரீவிநாயகர் ஐக்கிய நாணய சங்கம்). ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவச்சந்திரன் (லண்டன்), அரவிந்தன் (உற்பத்தி இணைப்பாளர், Nefad Foundation), மதுசூதனன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சுஜிந் (லண்டன்), ஜஸ்மிதன் (லண்டன்), நயனிகா ஆகியோரின் அன்புப் பேரனும் உமாதேவி, காலஞ்சென்ற இராசகுமாரியம்மா மற்றும் பவளராணி (லண்டன்), பத்மநாதன், இலங்கநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம், சிவலிங்கம், சிவநாதன் ஆகியோரின் மைத்துனரும் சோதிராஜா, காலஞ்சென்ற குணராசா மற்றும் பாக்கியராசா, வேல்ராசா, செந்தில்குமரன், ரஞ்சிதமலர், ரதிக்குமாரி, ரஞ்சனா, ஜெயந்தி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (15.04.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

விழிசிட்டி வீதி,
சூராவத்தை, சுன்னாகம்.

(CS/30039) J-1

தகவல்: குடும்பத்தினர்
077 611 8227



# காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் வடமராட்சி கரவெட்டி அல்வாய் கிழக்கில் 8 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு**

- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் இருவழி பாதையுடன்
- 1 பரப்பின் விலை
  - ✓ பிரதான வீதி முகப்புடன் பதினேழு லட்சம் ரூபா (17.000,00)
  - ✓ இரண்டாம் காணி பதினைந்து லட்சம் ரூபா (15.000.00)
  - ✓ பின் பகுதி காணி எட்டு லட்சம் ரூபா (8.000.00)
- நெல்லியடி பஸ்நிலையம் 2 1/2 KM, பருத்தித்துறை பஸ் நிலையம் 2 KM, மந்திகை ஆஸ்பத்திரி 1 KM பருத்தித்துறை வீதி 600M, மாலு சந்தி 1 KM தூரம்
- கரவெட்டி பிரதேசசபை 1 KM தூரம்
- தம்பசெட்டி மெதடிஸ்த மிசன் வித்தியாலயம் 1 KM தூரம், மாலுசந்தி பிள்ளையார் கோயில் 1 KM தூரம்
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி, செம்மண் தரை நன்னீர் ஊற்று
- தரகர் தேவையில்லை

(பார்வையிடும் நேரம் காலை 8.00 - மாலை 6.00 வரை)

தொடர்பு: 076 860 2770
076 987 8617
076 935 3971

(CS/30041) J-1


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.04.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org